**வேலணை மத்திய கல்லூரியிலிருந்த மோட்டார் இயந்திரங்கள் களவாடப்பட்டுள்ளன.**

எமது கல்லூரியில் தண்ணீர்த் தாங்கிகளுக்குத் தண்ணீர் நிரப்பப் பயன்பட்டு வந்த தலா ஒவ்வொன்றும் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு மோட்டார் இயந்திரங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (20-03-2016) இரவு களவாடப்பட்டுள்ளன. இதனால் கல்லூரியின் விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் தண்ணீர் இன்றிப் பெரும் சிரமங்களுக்கு ஆளாகியுள்ளனர் என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மனிதாபிமானமற்ற இச்செயலைச் சங்கத்தின் சார்பில் வன்மையாகக் கண்டிப்பதோடு காவல்த்துறையினர் இதற்கு உரிய சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன். கல்லூரி சிறப்பாக வளர்ந்துவரும் நிலையில் அதன் வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கக்கூடிய இதுபோன்ற ஈனச்செயல்கள் இனிமேலும் தொடராமலிருக்கப் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டுக் கல்லூரி நிர்வாகத்தைப் பலப்படுத்த வேண்டும் எனவும் எமது நிர்வாகத்தின் சார்பில் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஈண்டு நாம் யாரும் இசைந்தொன்றி நின்றிடுதல் வேண்டும்.

சி. இளஞ்செழியன் (தலைவர்)
வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்-கனடா



